## கன்னியாகுமரி மாவட்ட கனிம அறக்கட்டளை (DMF TRUST)

## 2017-2018 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள், 2017-ன் படி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.220/புமசு/2017-1, நாள் 19.09.2017-ன் படி கன்னியாகுமரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அறக்கட்டளைப் பத்திரமானது 24.09.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண் BK.IV-211/2017, நாள் 24.09.2017-ன் படி நாகர்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | நிர்வாகக் குழு அமைப்பு | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் - தலைவர் | மாவட்ட ஆட்சியர் - தலைவர் |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர் - உறுப்பினர் செயலர் | மாவட்ட வருவாய் அலுவலர் - துணைத்தலைவர் |
| 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை - நடத்தாளர் | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை - நடத்தாளர் |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை - உறுப்பினர் | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை - உறுப்பினர் |
| 5 | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் - உறுப்பினர் | மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் . (வளர்ச்சி) - உறுப்பினர் |
| 6 | முதன்மைக் கல்வி அலுவலர் - உறுப்பினர் | உதவி இயக்குநர் (ஊரக வளர்ச்சி) - உறுப்பினர் |
| 7 | மாவட்டக் கருவூல அலுவலர் - உறுப்பினர் | உதவி இயக்குநர், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் - உறுப்பினர் |
| 8 | மாவட்ட சமூக நல அலுவலர் - உறுப்பினர் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் - உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 9 | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்) - உறுப்பினர் | மாவட்ட வன அலுவலர் - உறுப்பினர் |
| 10 | திரு.T.ஐயப்பன், த/பெ.தம்புரான், துவரங்காடு, பூதப்பாண்டி - அலுவலகம் சாரா உறுப்பினர் | முதன்மைப் பொறியாளர், பொதுப்பணித்துறை - உறுப்பினர் |
| 11 | திரு.C.ஜெய பேரின்பகுமார், ராமவர்மபுரம், நாகர்கோவில் - அலுவலகம் சாரா உறுப்பினர் | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை - உறுப்பினர் |
| 12 | | மாவட்ட கருவூல அலுவலர் - உறுப்பினர் |
| 13 | | மாவட்ட சமூக நல அலுவலர் - உறுப்பினர் |
| 14 | | துணை இயக்குநர், (பொது சுகாதார மையப் பொறுப்பாளர்) சுகாதாரப் பணிகள் - உறுப்பினர் |
| 15 | | திரு.R.அருள்கண்ணன், ரோஜாவனம் நிறுவனம், நாகர்கோவில் - அலுவலகம் சாரா உறுப்பினர் |
| 16 | | Dr.E.ஜேம்ஸ் R. டேனியல், நாகர்கோவில். |

கன்னியாகுமரி மாவட்ட கனிம அறக்கட்டளையின் பேரில் சேமிப்பு கணக்கு பாரத மாநில வங்கி, நாகர்கோவில் கிளையில் துவங்கப்பட்டு, 17.09.2017 முதல் சிறு மற்றும் பெருங்கனிம குத்தகைதாரர்களிடம் கனிம அறக்கட்டளை நிதி வசூலிக்கப்பட்டு கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும், 45 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள், 2017-ன் படி 12.01.2015-க்கு முன்பாக வழங்கப்பட்ட குத்தகைக்கு கனிமத்தின் உரிமைக்கட்டணம் முப்பது சதவீதமும் (30%) 12.01.2015 அன்று மற்றும் அதற்கு பின்பு வழங்கப்பட்ட குத்தகைக்கு கனிமத்தின் உரிமை வரியில் பத்து சதவீதமும் (10%) மாவட்ட கனிம அறக்கட்டளைக்கு செலுத்தப்பட வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ள 3 பெருங்கனிம உரிமங்களும் 12.01.2015-க்கு முன்பாக

வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும் அனுமதி வழங்கப்பட்டுள்ள 45 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களில் 4 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையும், மீதமுள்ள 41 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் ஒன்பது கிராம ஊராட்சிகள் குவாரிகள் மற்றும் குவாரி சார்ந்த செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதியாக கண்டறியப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 31.03.2018 வரை ரூ.1,59,82,192/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தொன்பது லட்சத்து எண்பத்திரெண்டாயிரத்து நூற்று தொண்ணூற்று இரண்டு மட்டும்) மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் நிதியாண்டில் கன்னியாகுமரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக எந்தத் திட்டங்கள் ஏதும் வழங்கப்படவில்லை.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமை / பிற முன்னுரிமைத் திட்டம் |
|---|---|---|---|---|---|
| ஏதுமில்லை | | | | | |

திட்டங்கள் எதற்கும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்படாததாலும் தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படாததாலும் 2017-18-ம் ஆண்டிற்கான கணக்குத் தணிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

தலைவர்,
கன்னியாகுமரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை
மற்றும்
மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி